www.tamilarangam.net



# தோழர் சந்ததியார் படுகொலை!

## கொலையுண்டது ஒரு சந்ததி!

## கிளர்ந்தெழுகின்றது புதிய சந்ததி!!

**PLOT** உளவுப் படையினரால் சென்னையில் வைத்து செப்டெம்பர் 18, 1985 அன்று கடத்திச் செல்லப்பட்ட தோழர் சந்ததியார் (வசந்தன்) படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்ற துயரமான செய்தியை மிகுந்த வேதனையுடன் தமிழீழ மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

கடத்திச்சென்று சித்திரவதைக்குள்ளாக்கி படுகொலை செய்து எங்கோ ஒரு மூலையில் கேட்பாரற்று புதைக் கப்படுமளவிற்கு தோழர் சந்ததியார் செய்த "துரோகம்" தான் என்ன? தோழர் சந்ததியாருக்கு மரணதண்டனை வழங்கிய 'நீதவான்கள்' தான் யார் என்பதனை தமிழீழ மக்கள் இனம் கண்டுகொள்வது அவசியமானது.

1951-ம் ஆண்டு சுழிபுரத்தில் வறிய விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த தோழர் சந்ததியார் இளமையிலி ருந்தே நேர்மையும் மனிதாபிமானமும் போர்க் குணாம்சமும் மிக்கவராகத் திகழ்ந்தார் இவர் தனது பதினாறாவது வயதிலேயே யாழ்ப்பாண குடாநாட்டில் ஊறியிருந்த சாதி அடக்கு முறைகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தார். இவ ரது இத்தகைய போராட்டங்களினால் வட்டுக்கோட்டைப் பகுதியில் பல கோவில்கள், தேநீர்க்கடைகள் சாதிரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் திறந்துவிடப்பட்டன. எழுபதுகளின் ஆரம்பத்தில் தமிழ் மாணவர்களுக்கெதிராக சிறிலங்கா அரசு தரப்படுத்தல் மூலம் அடக்குமுறைகளைக் கொண்டுவந்தபோது அதற்கெதிராகப் போராடிய தமிழ்மாணவர் பேரவையில் முன்னணி உறுப்பினராக விளங்கி பல போராட்டங்களை முன்னெடுத்தார்.

### சிறிலங்கா அரசினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் சித்திரவதைக்காளானார்

புரட்சிகர நடவடிக்கைகளில் தோழர் சந்ததியாருக்கு இருந்த ஈடுபாடு காரணமாக 1975-ம் ஆண்டு யாழ்ப் பாண மேயர் அல்பிரட் துரையப்பாவின் கொலையை அடுத்து கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட் டார். சித்திரவதை விசாரணைகளின்போது எந்தவொரு சக தோழனையும் காட்டிக்கொடுக்காது காப்பாற்றியதன் மூலம் போராட்டத்தின்பாலுள்ள தனது விசுவாசத்தையும் மனவுறுதியையும் வெளிப்படுத்தினார்.

சிறைவாழ்வில் விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் போராட்டங்களில் முக் கிய பங்கு வகித்தார். சிறையில் இருந்த காலத்தில் இவருக்கு மார்க்சியத்தின்பால் ஏற்பட்ட பரிச்சியமானது இவ ரது அரசியல் பார்வையை விசாலமாக்கியது; புரட்சிகர உணர்வை புடம்போட்டெடுத்தது.

சிறையிலிருந்து விடுதலையானதும் தமிழீழப் போராட்டத்திற்கான வெகுஜன அபிப்பிராய வாக்கெடுப்பாகக் கருதி 1977 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) யின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தார். தேர்தல் பிரச்சார மேடைகளில் அன்று முழங்கிய இவரது விடுதலைக் குரலை இன்றுகூட பலர் நினைவு கூர்வர்.

www.tamilarangam.net



## தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறினார்

1977 பொதுத்தேர்தல் வெற்றிக்குப் பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தேர்தல்கால வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டது; தமிழீழ விடுதலை போராட்டத்தை முன்னெடுப்பதற்கு பதிலாக தேர்தல் வெற்றி விழாக்களைக் கொண்டாடியது. 1977 இனக்கலவரங்களையடுத்து ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் அகதிகளாக்கப் பட்ட நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோகத்தனமான கேளிக்கைகளைக் கண்டு தோழர் சந்ததியார் மனம் வெதும்பினார். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலில் அதிருப்தியுற்று, காந்தீய இயக்கத்தில் இணைந்து இனக்கலவரங்களினால் அகதிகளாக்கப்பட்ட மலையக அகதிகளை பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் குடியமர்த்தும் பணியில் ஈடுபட்டார். குடியமர்த்தப்படும் மலையக அகதிகள் தமிழ்ப் பிரதேசங்களிலும் சுரண்டப்படும் நிலைமை உருவாகாது தமது சொந்தப் பொருளாதாரத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார். அதற்கான விவசாயத் திட்டங்களை ஆரம்பித்து அதில் பல வருடங்கள் உழைத்தார்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்யும் இனவாத அரசாங்க அமைச்சர்களுக்கு வரவேற்புகள் அளித்தும் அடிக்கடி அமைச்சர்களுடனும் ஜனாதிபதியுடனும் சந்திப்புக்கள் நடத்தியும் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பின்தள்ள முனைந்தபோது தோழர் சந்ததியார் தலைமையில் தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து இளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையின் தவறான போக்கை எதிர்த்து போராடினார்கள். சிறிலங்கா அரசுடன் தனது நலன்களை இணைத்துக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை இதற்குமேல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கமாட்டாது எனக் கண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து பிரிந்து சென்று புரட்சிகர இயக்கமொன்றை அமைக்கும் முயற்சியில் இவர் இறங்கினார்.

## ''புதியபாதை'' குழுவினருடன் சேர்ந்து PLOT ஐ உருவாக்கினார்

தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கத்திலிருந்து முரண்பட்டு வெளியேறி ''புதியபாதை'' பத்திரிகைக் குழுவாக இயங்கிய தோழர்களுடன் சேர்ந்து தோழர் சந்ததியார் PLOT ஐ உருவாக்கினார் ஆரம்பம் முதலே பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் இயக்க நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன் சிறிலங்கா அரசினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் தேடப்பட்டுவந்த உமாமகேஸ்வரனைப் பாதுகாத்து வைத்திருந்து PLOTன் ஆரம்ப நடவடிக்கைகளில் அதிகளவு பங்கேற்றார். உமாமகேஸ்வரன் நீண்டகாலமாக சென்னையிலேயே இருந்து வருகின்றபோதும் தோழர் சந்ததியார் தமிழீழத்திலேயே சிறிலங்கா அரசின் பலத்த தேடுதல்களுக்கும் மத்தியில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு PLOT ஐ ஒரு பலமான தாபனமாகக் கட்டியமைத்தார். PLOT ஆரம்ப காலத்தில் எதிர்கொண்ட சவால்களை வெற்றிகரமாக முகம்கொடுத்தார். இயக்க நடவடிக்கைகளில் இவரது கறாரான போக்கு காரணமாகவும் தவறான போக்குகளுடன் சமரசம் செய்து கொள்ளாத தன்மையாலும் இவர் PLOT இனுள்ளும் வெளியும் பலருடனும் முட்டிமோத வேண்டியதாயிற்று.

தமது அரசியல் வாழ்வு முழுவதுமே புரட்சியாளர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொண்ட தோழர் சந்ததியார் PLOT இனுள் எழுந்த அனைத்து தவறான போக்குகளையும் எதிர்ப்புரட்சிகர அம்சங்களையும் எதிர்த்து ஆரம்பம் முதலே போரிட்டு வந்தார். PLOT இனுள் காணப்பட்ட பாட்டாளி வர்க்கத்துக்கு விரோதமான கண்ணோட்டங்கள், தோழர்கள் மீது நடத்தப்பட்ட சித்திரவதைகள், கொலைகள் தலைமை வழிபாடு, அதிகார துஷ்பிரயோகம், நிதிமோசடி, ஊழல், அராஜகம் போன்றவற்றிற்கெதிராகக் கடுமையாகப் போராடினார். மேலும் இயக்கத்திற்கு தெரியாமல் உமாமகேஸ்வரனால் மேற்கொள்ளப்பட்டுவந்த போதைவஸ்து கடத்தல் மற்றும் இதர கள்ளக் கடத்தல் நடவடிக்கைகள் போன்றவற்றை சக தோழர்கள் மத்தியில் அம்பலப்படுத்தினார் உமாமகேஸ்வரன் அமிர்தலிங்கத்துடன் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கைக்கு பின்னால் மறைந்துள்ள உமாமகேஸ்வரனின் வர்க்க நலன்களை வெளிப்படுத்தினார்.

## PLOT இலிருந்து செப்டெம்பர், 84ல் வெளியேறினார்

தனது மோசடிகளை ஒவ்வொன்றாக அம்பலமாக்குவதன் மூலம் தனது முகத்திரையை தோழர் சந்ததியார் கிழித்தெறிவதை அவதானித்த உமாமகேஸ்வரன், தோழர் சந்ததியார் இயக்கத்தை உடைப்பதற்கு சதி செய்கின்றார் என அபாண்டமாக குற்றஞ்சாட்டினார். உமாமகேஸ்வரன் தனது மோசடிகள் அம்பலமாவதை தடுப்பதற்காக விசேட உளவுப்படையை உருவாக்கி பயிற்சி முகாம்களை சித்திரவதை முகாம்களாக மாற்றியமைத்தார். இதற்குமேல் PLOT இனுள் இருந்து நடத்தும் போராட்டம் தமிழ் சமுதாயத்திற்கு எதுவித பலனையும் கொடுக்கமாட்டாது எனக் கண்ட தோழர் சந்ததியார் PLOT இலிருந்து செப்டெம்பர், 1984ல் வெளியேறினார்.

தோழர் சந்ததியார் வெளியேறிய செய்தியை ஆரம்பத்தில் உமாமகேஸ்வரன் PLOT தோழர்களுக்கும் வெளியிலும் தெரியாவண்ணம் மறைக்க முயன்றார். ஆனால் உண்மைகள் படிப்படியாக தெரியவரவே மக்கள் மத்தியிலும் தோழர்கள் மத்தியிலும் பல சர்ச்சைகள் எழுந்தன. இவற்றை சமாளிப்பதற்காக உமாமகேஸ்வரன் தோழர் சந்ததி

www.tamilarangam.net



யார் மீது பல அவதூறுகளைப் பொழிந்தார். இந்த அவதூறுகளாலும் பல தோழர்களை ஏமாற்றிவிட முடியாது எனக் கண்டு தோழர் சந்ததியாரை இரகசியமாகக் கடத்தவும் கொலை செய்துவிட்டு மறைக்கவும் சதி செய்தார். தோழர் சந்ததியார் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டு கடத்தல் முயற்சிகளும் ஒரு கொலை முயற்சியும் தோல்வியுற்றபோதும் செப்டெம்பர் 18, 1985 காலை சென்னையில் வைத்து தோழர் சந்ததியாரைக் கடத்திச் சென்று கொலை செய்துள்ளார்கள்.

## தோழர் சந்ததியார் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம்

தோழர் சந்ததியார் சென்னையில் வைத்து கடத்தப்பட்டதையடுத்து சென்னையில் இந்தியப் பொலிஸ் PLOT உளவுப் படையினரைச் சேர்ந்த எண்மரைக் கைதுசெய்து விசாரணை செய்தது. உடனடியாக அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் தமிழ்நாடு அமைச்சர் ஒருவரின் உதவியுடன் இது விடயத்தில் தலையிட்டு கைது செய்யப்பட்ட PLOT உளவுப்படையைச் சேர்ந்தஎண்மரையும் விடுவித்ததுடன் பொலிஸ் விசாரணையும் கைவிடச் செய்தார். அமிர்தலிங்கம் இந்நடவடிக்கை மூலம் தனது நீண்டகால அரசியல் எதிரியான தோழர் சந்ததியாரை தீர்த்துக் கட்டுவதில் தனது பங்களிப்பை ஆற்றினார். 1982-ல் தோழர் சிவசண்முகமூர்த்தி (சுந்தரம்) படுகொலை செய்யப்பட்டபோது அப்படுகொலையின் பின்னணியில் அமிர்தலிங்கமும் இருந்ததை இதே உமாமகேஸ்வரனும் அம்பலப்படுத்தி, குற்றஞ்சாட்டியது இங்கு நினைவு கூரத்தக்கது.

அமிர்தலிங்கம் தனது துரோகத்தனமான அரசியலை அம்பலப்படுத்த முனையும், ஒவ்வொரு போராளியையும் எவ்வாறு அழித்தொழிக்கின்றார் என்பதனை ஒவ்வொருவரும் இனம் காணத் தவறக்கூடாது. பல புரட்சியாளர்களை படுகொலை செய்விப்பதன் மூலமே தனது "அஹிம்சை" அரசியலை அமிர்தலிங்கம் முன்னெடுத்து வந்துள்ளார். அமிர்தலிங்கத்தினதும் உமாமகேஸ்வரனினதும் இந்த துரோகங்களை தமிழ் மக்கள் என்றுமே மன்னிக்க மாட்டார்கள்.

தோழர் சந்ததியார் கடத்தப்பட்டதையடுத்து சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் சென்னையிலுள்ள PLOT அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்; தோழர் சந்ததியாரை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் நாடு முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரனிடமும் மனுவொன்றைக் கொடுத்தார்கள். வெளிநாடுகளிலிருந்தும் பல PLOT ஆதரவாளர்கள் தமது எதிர்ப்பை உமாமகேஸ்வரனுக்கு தெரிவித்தார்கள். இதனையடுத்து உமாமகேஸ்வரன் இந்தியப் பத்திரிகையொன்றிற்கு விடுத்த செய்தியொன்றில் "தோழர் சந்ததியார் பல பெண்களுடன் தொடர்புடையவர். ஆகவே தானாகவே தலைமறைவாகியிருப்பார்" எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரு புரட்சியாளனைக் கடத்திச்சென்று கொலை செய்துவிட்டு அதனை ஒரு பெண் விவகாரமாக காட்ட முயல்வதன் மூலம் தோழர் சந்ததியாரின் கொலைக்கு எந்த நியாயமான காரணத்தையும் காட்ட வக்கற்ற நிலையில் உமாமகேஸ்வரன் இருப்பதையும் உமாமகேஸ்வரனது தரங்கெட்ட அரசியலையும் காணமுடிகிறது. தமிழீழ மக்களை எவ்வளவு மட்டமானவர்களாக, எப்படிப்பட்ட முட்டாள்களாக கருதியிருப்பதால உமாமகேஸ்வரன் தமிழீழ மக்களை இது போன்ற வார்த்தை ஜாலங்களால் ஏமாற்றி விடலாம் எனக் கனவு காண்கிறார். தமிழீழ மக்கள் இன்று பல இயக்கங்களின் முன்னணி உறுப்பினர்களைவிட அரசியல் அறிவால் உயர்ந்தவர்கள் என்பதனை உமாமகேஸ்வரன் அறியவில்லை போலும்.

தோழர் சந்ததியார் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக தனது வாழ்வை முழுமையாக இதய பூர்வமாக தமிழீழ மக்களின விமோசனத்திற்காக அர்ப்பணித்தவர். சிக்கனம், கடின உழைப்பு, நேர்மை, முழுமையான அர்ப்பணிப்பு, அநீதிகளுடன் சமரசம் செய்து கொள்ளாத போர்க் குணாம்சம், தர்க்க ரீதியான அணுகுமுறை போன்றவை தோழர் சந்ததியாரிடமிருந்து ஒவ்வொரு போராளியும் சுவீகரித்துக்கொள்ளவேண்டிய அம்சங்களாகும். தோழர் சந்ததியாரிடமும் சில பலவீனங்கள் இருக்கத்தான் செய்தன. இவர் இலகுவில் எவரையும் நம்பிவிடக் கூடியவர். இதனால் இவர் பல தடவைகள் ஏமாந்ததுண்டு. எதிரியின் நடவடிக்கைகளையிட்டு போதியளவு எச்சரிக்கை கொள்ளாது எதிரியை இலகுவாக மதிப்பிடக்கூடியர். தன்னைக் கடத்துவதற்கும் கொலை செய்வதற்குமான முயற்சிகளைப் பற்றி அறிந்திருந்தும் போதியளவு முன்னெச்சரிக்கை எடுக்காது இருந்தது தோழர் சந்ததியாரின் பலவீனத்தையே காட்டுகிறது. புரட்சியாளர்களிடம் இருக்கக்கூடாத பலவீனமிது. புரட்சியாளர்கள் சிந்தனைத் தெளிவுள்ளவர்களாக, தியாக உணர்வுள்ளவர்களாக, போர்க் குணாம்சம் மிக்கவர்களாக இருந்துவிட்டால் மட்டும போதாது. எதிரியை சரியாக மதிப்பிடவும் அவனது சதி நடவடிக்கைகளிலிருந்து தப்பி வாழ்ந்து போராடவும் தெரிந்திருக்க வேண்டும். எமது சொந்த போராட்ட அணிகளுக்குள்ளேயே துரோகிகள் பகிரங்கமாக உலாவ ஆரம்பித்துவிட்ட இன்றைய நிலையில் தோழர் சந்ததியாரின பலவீனத்திலிருந்து விமர்சன ரீதியான படிப்பினைகளை பெறுவதும் எச்சரிக்கை அடைவதும் ஒவ்வொரு போராளிக்கும் அவசியமானது.

மக்களின விமோசனத்திற்காக தம்மை அர்ப்பணித்துப் போராடும் போராளிகள் ஒவ்வொருவரும் மக்களின் சொத்துக்களாகும். இப் போராளிகளை அழிப்பது மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும்.

ஒன்று மட்டும் நிச்சயமானது. விடுதலைப் போராளிகளின் குரல்வளையை நசுக்கும் கரங்கள் மக்களுக்கு ஒரு போதும் விடுதலையைக் கொண்டுவர மாட்டா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துயர் படிந்த இந்த அவல வாழ்விலிருந்து தமக்கு விமோசனம் கிடைக்க மாட்டாதா என ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு அடுத்தடுத்து மேற்கொள்ளும் படுகொலைகள் மூலம் PLOT காட்டுப வழியென்ன?

எதிரி இராணுவத்தை சேர்ந்தவர்களை எதிரியின் பொலிஸ் படையினரை ''தோழர்கள்'' என அழைத்து விடுதலை இயக்கங்களின் தாக்குதல்களின்போது அவர்கள் கொல்லப்படுவதற்கு கவலை தெரிவிக்கும் PLOT தலைமை, புரட்சியாளர்களை இவ்வாறு அடுத்தடுத்து கொலை செய்வதன் மூலம் தாம் யார் பக்கம் செயற்படுகின்றார்கள் என்பதை சரிவர இனம் காட்டிக்கொள்கின்றார்கள்.

தோழர் சந்ததியாரின் மறைவு தமிழ் சமுதாயத்திற்கு பாரிய இழப்பேயாகும். ஆயினும் மனிதகுல வரலாற்றில் இதுபோன்ற துரோகத்தனங்கள் ஒன்றும் புதிய நிகழ்வுகள் அல்ல. ஒவ்வொரு இழப்பிற்கு பின்னும் இன்னும் வீரியமும் திறமையும் மிகுந்த புரட்சியாளர்கள் ஆயிரமாயிரமாகத் தோன்றி அடக்கு முறையையும் சுரண்டலையும் அராஜகத்தையும் துரோகத் தனங்களையும் புதைகுழிகளுக்கு அனுப்பியுள்ளதை மக்களின் போராட்ட வரலாறுகள் நிறையவே கற்றுத்தந்துள்ளன.

தோழர் சந்ததியார் தனது இறுதி நாட்களில் ஒரு நண்பரிடம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்று தோன்றியுள்ள அராஜக நிலைமை பற்றி உரையாடிக்கொண்டிருக்கும்போது ''அராஜகத்திற்கெதிரான போராட்டம் தனித்து ஒரு சந்ததியாரின் தலையில் மட்டும் சுமத்தப்பட்ட கடமையல்ல. ஒவ்வொருவரும் முகம் கொடுத்து போராடவேண்டியதொன்றாகும். நான் எனது கடமையை செவ்வனே செய்கின்றேன். ஒவ்வொருவரும் தமது கடமைகளை ஆற்றினால் மட்டுமே அராஜகமானது தோற்கடிக்க முடியும்'' எனக் கூறினார். இதுவே தோழர் சந்ததியார் தமிழ் சமுதாயத்திற்கு விடுத்த இறுதி வேண்டுகோளுமாகும்.

அதையே நாமும் கேட்கின்றோம்.

எதிரியின் மரணக் கயிற்றை தாண்டி வந்தார் ஆனால் துரோகிகள் முதுகில் குத்தினரே.



(சிறிலங்கா நீதி மன்றத்தில் தோழர் சந்ததியார் ஆஜராக்கப்பட்டபோது, இடமிருந்து மூன்றாவதாக காணப்படுகின்றார்)

தமிழ் மக்களே!

உங்கள் விடுதலைக்காக, விமோசனத்திற்காகப் போராடும் புரட்சியாளர்களின் முதுகிலே இந்தத் துரோகக் கும்பல் குத்துவதை எத்தனை காலம்தான் அனுமதிக்கப் போகின்றீர்கள்.

தோழரே!

உங்கள் தியாகம் வீண்போகாது. வீறுகொண்டெழும் தமிழ் மக்கள் நாளை ஓர் புதிய சமுதாயம் படைப்பார்கள். அதுவே உமக்கு தமிழீழ மக்கள் செய்யும் அஞ்சலியாகும்.

அதுவரை

எங்கள் உள்ளத்தில் நின்று உணர்வுகளை சூடேற்றுவீர்.

கண்களில் தீப்பொறியாக நின்று எதிரிகளைச் சுட்டெரிப்பீர்.

சிந்தனைச் சுடராக நின்று வழிகாட்டுவீர்.

நவம்பர், 21, 1985 — தீப்பொறி —

---

இத் துண்டுப் பிரசுரம் தீப்பொறி வெளியீட்டினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Tamils For A Democratic Eelam,

B.M Box 4338,

London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்